KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 1, No. 04 (2016) 1

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts01042016.01

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

தமிழ் உரைநடை வளர்ச்சியும் வகைப்பாடும்

THE DEVELOPMENT AND CLASSIFICATION OF TAMIL PROSE

Dr. U. Alibava[1,*iD]

[1] Professor & Head, Department of Tamil Studies, Bharathidasan University, Tiruchirappalli - 620 024.
***Corresponding author:** Dr. U. Alibava, alibavapkm@gmail.com
ORCID iD: Dr. U. Alibava https://orcid.org/0000-0002-2051-7002

ARTICLE INFO

Article history
Received: 10 October 2016
Revised: 20 October 2016
Accepted: 28 October 2016

Article ID
KIJTS-2026-0019

Peer review
Double-blind peer review

Keywords
Tamil Prose
Historical Development
Tolkappiyam
Silappathikaram
Prose
Commentaries
Literary Development
Classification of Prose.

ABSTRACT

Tamil is one of the oldest classical languages, possessing a rich literary and grammatical tradition spanning more than two thousand years. Prose has played a significant role in the development of Tamil literature, evolving through various historical periods. Although poetry dominated the early stages of Tamil literary tradition, references to prose can be traced back to the period of Tolkappiyar. The prose elements found in Tolkappiyam and Silappathikaram provide important evidence of the early development of Tamil prose. During the Pallava period, prose developed through commentaries, inscriptions, and the Manipravalam style. Subsequently, the Chola and Nayak periods witnessed considerable growth in prose through the contributions of commentators and scholars. The arrival of Europeans, the establishment of printing presses, the expansion of education, and the emergence of periodicals contributed significantly to the development of modern Tamil prose as an independent literary form. Scholars such as Veeramamunivar, Arumuga Navalar, Mayuram Vedanayagam Pillai, Subramania Bharathiyar, Maraimalai Adigal, and Thiru. Vi. Kalyanasundaranar made remarkable contributions to its growth and enrichment. Furthermore, Tamil prose can be classified into six major forms based on its purpose and literary function: expository prose, argumentative prose, narrative prose, descriptive prose, dramatic prose, and contemplative prose. The classification of words used in prose also reflects its linguistic diversity and stylistic richness. This article examines the historical background, evolutionary stages, significant contributors, and various classifications of Tamil prose, highlighting its role in the enrichment of Tamil language and literature.

How to cite this article: Dr. U. Alibava (2026). தமிழ் உரைநடை வளர்ச்சியும் வகைப்பாடும். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *1*(04), 1–10. https://doi.org/10.63300/kijts01042016.01
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முனைவர் உ. அலிபாவா

பேராசிரியர் & தலைவர், தமிழியல்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம்

திருச்சிராப்பள்ளி - 620 024, Email : alibavapkm@gmail.com

https://orcid.org/0000-0002-2051-7002

இரண்டாயிரமாண்டுகளுக்கும் மேலான இலக்கிய இலக்கணப் பழமையுடைய தொன்மையான மொழி தமிழ். உலக அரங்கில் உரைநடை முன்பு தோன்றியதாகக் கொள்ளப்படினும் தொல்காப்பியர் காலத்திலேயே தமிழில் உரைநடை இருந்ததற்கான குறிப்புகள் உள்ளன. தொல்காப்பியர் காலத்திற்குப் பின்பு உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாகச் சிலப்பதிகாரம் திகழ்வதைக் காணமுடிகிறது. இதற்குப் பின்பும் உரையும் பாட்டும் விரவி வருவதைக் காணமுடிகிறது. தமிழ் உரையாசிரியர்கள் இலக்கண நூல்களுக்கும் இலக்கிய நூல்களுக்கும் உரை எழுதும் முகத்தான் உரைநடையை வளமாகக் கையாண்டுள்ளனர். இங்ஙனம் வளர்ந்து வந்த உரைநடை ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னர் ஆலவிருட்சம் போல் கிளை பரப்பியும் விழுதுவிட்டும் வளர்ந்துள்ளது. உரைநடை இன்றேல் எந்த ஓர் மொழியும் நடைபயிலாது எனுமாப்போலத் தமிழும் இன்றைய நடையில் உரைநடை வடிவத்தில் வளம் பெற்று வருகிறது. இத்தகைய உரைநடை தொடக்ககாலம் முதல் இன்றைக்கு வரை வளர்ந்து வந்துள்ள பான்மையினை விளக்குவதாக இக் கட்டுரை அமைகிறது.

காலங்காலமாகத் தமிழில் உரைநடை இருந்துள்ளது; இருப்பினும் பாட்டிலக்கியமே தமிழில் தொடக்க காலம் முதல் செழித்து வளர்ந்தது. ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னரே தமிழில் ‘உரைநடை’ வடிவம் கவனம் பெறலாயிற்று. “19 ஆம் நூற்றாண்டில் கிளர்ந்து 20 ஆம் நூற்றாண்டில் சிறந்து செழித்த தமிழ் உரைநடை, ஆங்கிலேயரின் தொடர்பால் விளைந்த ஒன்று. இதனால் இதன்முன் தமிழில் உரைநடை இல்லை என்பது பொருளாகாது. இற்றை நாளில் நாம் கருதும் Prose Literature என்ற வகையில் இந்த இரு நூற்றாண்டுகளில் எழுந்ததே” என்பார் மது.ச. விமலானந்தம் (தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், முதல் தொகுதி, ப. 693). இங்ஙனம் வளர்ந்த தமிழ் உரைநடையின் தோற்ற வரலாற்றுப் பின்புலம் கவனிக்கத்தக்கது.

பாட்டு

“இயற்றமிழ் பாட்டு (Verse), உரைநடை (Prose) என இருவகையில் அடங்கும்; இவற்றுள் எது முன்னர் எழுந்தது என்றால், பாட்டே எனலாம். எம் மொழியிலும் பாட்டே முன்னர் பிறந்தது; பின்னரே உரைநடை உண்டானது” (Music and Rhyme are among the earliest pleasure of the child and in the History of Literature, poetry proceeds prose - R.W. Emerson) என்பர் எமர்சன் (தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், முதல் தொகுதி, ப. 694). இது தமிழுக்கும் பொருந்தும். ‘மொழிநூலறிஞர்களும் இதனையே உறுதிப்படுத்துகின்றனர்’ (Man sang out their feelings long before they were able to speak their thought - Otto Gesperson) என்பார் ஓட்டோ ஜெஸ்பெர்சன் (தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், முதல் தொகுதி, ப. 694). பாட்டு முன்னர் தோன்றிய நிலையில், ஏனைய மொழிகளில் பல்லாண்டுகளுக்கு முன்பே உரைநடை தோன்றி வளர்ந்தது; தமிழில் மிகவும் பிற்காலத்தில்தான் உரைநடை, இலக்கியத் தகுதி பெற்றது.

பிறமொழிகளில் உரைநடை

உலக அரங்கில் தமிழ் அல்லாத பிறமொழிகளில் உரைநடை முன்பே தோன்றியுள்ளது. குறிப்பாக இலத்தீனில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உரைநடை தோன்றியுள்ளது. கிரேக்கத்தில் இதற்குச் சற்றுப் பின்பு உரைநடை தோன்றி இருக்கிறது. ஆங்கிலத்தில் ஆல்பர்ட் அரசர் காலத்தில் உரைநடை தோற்றம் பெற்றுள்ளது. வடமொழி வேதங்களில் ஒருபகுதி உரைநடையாக இருப்பதும் இவண் எண்ணத்தக்கது.

ஆரம்ப நாட்களில் கவிதை மிகுந்திருந்தமைக்கான காரணங்கள்

எழுத்துமுறை தோன்றுவதற்கு முன்பு நினைவில் தங்கக்கூடிய வகையில் சுருக்கமாக எதுகை மோனையுடன் பாடிச் செவிவழி ஓதுவதற்கு பாட்டு ஏற்ற வகையில் இருந்திருக்கிறது. அதனால் பாட்டாகப் பாடி வந்தனர்.

பனை ஓலைகளில் இரும்பினாலான எழுத்தாணி கொண்டு எழுதுவதற்கும் எழுதியதைக் காப்பதற்கும் பெரு முயற்சி தேவைப்பட்டதால், சுருக்கமும் செறிவும் கருதிப் பாட்டாக எழுதி வைத்தனர்.

பண்டைக் காலம் உணர்வுமிக்க காலமாக இருந்ததேயல்லாமல் இன்றுபோல் அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சி பெற்ற காலமாக இல்லை.

இதனால் எதையும் தருக்க முறையில் எழுதுவதைவிடக் கற்பனையாகப் பாடுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர். அதனால் உரைநடை எளிதாகத் தோன்ற முடியவில்லை.

பேப்பர், பேனா போன்ற எழுது பொருட்களும் கருவிகளும், அச்சியந்திரங்களும் இல்லாமல் இருந்தமையால் தமிழில் எளிதாக உரைநடை தோன்றமுடியவில்லை. கிறித்துவிற்குப் பல்லாண்டுகட்கு முன்னரே தமிழில் பாட்டு நிலைபெற்றிருக்க உரைநடை ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர், வீரமாமுனிவர் காலத்தில்தான் தோன்றுவதைக் காணமுடிகிறது.

தொல்காப்பியத்தில் உரைநடை பற்றிய குறிப்பு

ஐரோப்பியர் வரவுக்கு முன்னர் தமிழில் உரைநடை இல்லை என்று யாராலும் சொல்ல முடியாது. ஆங்கிலேயர் தொடர்பால் அது ஓர் தனித்ததோர் இலக்கிய வடிவமாக உருவாகிப் பல்வேறு இலக்கிய வகைமைகளில் பெருகி வளர்ந்தது என்று சொல்லலாமே தவிரத் தமிழில் அறவே உரைநடை இல்லை என்று அறுதியிட்டு உறுதியாகச் சொல்ல ஒல்லாது.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழில் உரைநடை வடிவம் இருந்ததற்கான குறிப்புத் தொல்காப்பியச் செய்யுளியலில் பதிவாகியுள்ளது. செய்யப்படுவது செய்யுள்; இசைக்கப்படுவது இசை, அளக்கப்படுவது அளவை, நிறுக்கப்பெறுவது நிலுவை, மொழியப்படுவது மொழி, பாடப்படுவது பாட்டு, உரைக்கப்படுவது உரை

என்பனவாறு செய்யுளின் பொருளை வருவித்துக் கொள்ள வேண்டும். இதனால் செய்யுள் என்றால் 'பாட்டு' ஒன்றனையே குறிக்கும் என்று கருதலாகிறது.

"**பாட்டிடை வைத்த குறிப்பினானும்**

பாஇன்று எழுந்த கிளவியானும்

பொருள்மரபு இல்லாப் பொய்ம்மொழி யானும்

பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்

உரைவகை நடையே நான்குஎன மொழிப" (தொல். செய். நூ. 173)

எனக் குறிப்பிடுகிறார். தொல்காப்பியர் இதில் உரைநடையினை,

1. பாட்டிடை வைத்த குறிப்பு
2. பாவின்றெழுந்த கிளவி
3. பொருளொடு புணராப் பொய்ம்மொழி
4. பொருளொடு புணர்ந்த நகைமொழி

எனும் நான்காக அவர் வகுத்துரைக்கிறார்.

'பாட்டிடை வைத்த குறிப்பு' என்பது உரைச்செய்யுள் எனப்படுகிறது. உரைவகை நடையும் கருத்தை வெளிப்படுத்தச் செய்யப்படும் யாப்பு வடிவங்களுள் ஒன்றெனவே கருதப்பட்டது. வடமொழியிலுள்ள 'சம்பு காவியம் போல' பாட்டுகளுக்கிடையே உரைநடை மிடைந்து வந்த பெருந்தேவனார் பாரதத்தையும் தகடூர் யாத்திரையையும் இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் உரைநடையிட்ட பாட்டுடைச் செய்யுளுக்கு உதாரணமாகத் திகழ்கிறது. பாட்டிற்கு உரையாகக் கூறப்படும் உரை நூல்கள் தனித்த உரைநடை நூல்களுக்கு எடுத்துக்காட்டாகும்.

'பொருளொடு புணராப் பொய்ம்மொழி', 'பொருளொடு புணர்ந்த நகைமொழி' ஆகிய இரண்டிற்கும் முறையே 'ஒரு பொருளின்றிப் பொய்படத் தொடர்ந்து செல்லும் நவீனங்களும்,' 'நகுதற்கு ஏதுவாய நாடகங்களும் சிறுகதைகளும்' உதாரணங்களாகத் திகழ்கின்றன.

"தொல்காப்பியர் காலத்தும் அவருக்கு முன்னும் நான்கு நெறிப்பட்ட உரைநடை இலக்கியங்கள் இருந்தன என்பது மேற்காணும் கருத்தால் தெளிவாகிறது, அவற்றின் நடை, பாட்டுப் போலவே எதுகை, மோனையுடன் இணைந்து செல்லும் செறிவு நடையாக உள்ளது. அகவலின் சாயல் கொண்டது. ஒரு வேளை பாட்டிலிருந்து பிறந்திருக்கலாமோ என்றும் எண்ணத் தோன்றுகிறது" என்பார் மது.ச. விமலானந்தம் (தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், முதல் தொகுதி, ப. 696).

சிலப்பதிகாரத்தில் உரைநடை

"தமிழ் உரைநடையின் ஆரம்ப வடிவத்தை நாம் சிலப்பதிகாரத்திலேயே காணலாம். சிலப்பதிகாரத்திலுள்ள கானல்வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை என்னும்

பகுதிகளில் வந்துள்ள உரைப்பாகங்களைப் பார்க்கும்போது அவை தமிழ் உரைநடையின் ஆரம்ப நிலையினை ஞாபகப்படுத்தி நிற்கின்றன" (தமிழ் உரைநடை வரலாறு, ப. 5) என்பார் வி. செல்வநாயகம்.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னர் எழுந்த உரைநடை சிலப்பதிகாரத்திலும் தொடர்கிறது. இது 'உரைபெறு கட்டுரை,' 'உரைப்பாட்டு மடை' எனச் சிலப்பதிகாரத்தில் இடையிடையே காணப்படுகிறது. 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' எனவும் சிலப்பதிகாரம் குறிக்கப் பெறுவதும் இவண் நினைக்கத்தக்கது.

'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்பதால் பாட்டினும் கடுமையான உரைநடை சிலம்பில் காணலாகிறது என்பது புலப்படுகிறது. அவ்வகையில் இந்நடை சிலப்பதிகாரத்தில் உயர்ந்த நடையாகத் திகழ்கிறது.

பல்லவர் காலத்தில் உரைநடை

பல்லவர் காலத்தில் உரைநடை 1. களவியலுரை, 2. சாசனங்கள், 3. மணிப்பிரவாளம் என முப்பிரிவுகளில் வளர்ந்தது. தமிழ் இலக்கிய வரலாற்றுக் கால கட்டத்தில் இருண்ட காலம் என்றழைக்கப்படும் பல்லவர் காலகட்டத்தில் பாட்டினை உரையின்றிப் படித்து உணரமுடியாத நிலை ஏற்பட்டது. அந்நிலையில் முதல் உரையாகத் தோன்றிய உரையே இறையனார் களவியல் உரையாகும். இதுவே தமிழ் உரைநடை வரலாற்றில் முதல் காலகட்டமாகத் திகழ்கிறது. இந்நூலுக்கு "நக்கீரர் உரை வகுத்துள்ளார்; என்றாலும் ஒன்பது தலைமுறைக்குப்பின் நீலகண்டனாரால் எழுத்துரு தரப் பெற்றுள்ளது. இவ்வுரை (பிறர் கூற்றான் அமையும்) 8 ஆம் நூற்றாண்டளவில் வினா - விடை முறையிலும், எதுகை மோனை கொண்ட கவிதை நடையிலுமாக இருவகையில் அமைகிறது. பாட்டிலிருந்து உரைநடைக்குத் திரும்பும் காலம் (Transitional period) தென்படுகிறது. முதன் முதல் முழு உரைநடையாக அமையும் உரை. இரண்டடி நூற்பாவுக்கு 60 பக்க உரை அமையும்' திறன் கண்டு திகைக்கிறோம். இவ்வுரை நடையை ஒடித்து மடக்கிய பாட்டாக அமைத்து விடலாம் போல் உளது. கவிதை நடை" என்று மது.ச. விமாலனந்தம் எடுத்துரைக்கிறார் (தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், முதல் தொகுதி, ப. 697).

மேலும் அவர், "பல்லவர் காலச் சாசனங்கள் தனித்தமிழின்; ஒரு பகுதி வடமொழி, மறுபகுதி தமிழ் என இருவகையும் ஒரு சேர அமைவன; வடசொல் பெய்து வரையப்பட்டவை என மூவகையின" (தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், முதல் தொகுதி, ப. 697) எனக் குறிப்பிடுவதுடன், "வடமொழி வண்டமிழிற் புகவே மெல்ல மணிப்பிரவாளம் பிறந்தது. மணி = முத்து; பிரவாளம் = பவளம். சரிநிகர் சமானமாக வடமொழியும் தமிழும் கலந்த நடை, தேவநாகரி, கிரந்த எழுத்திலும் அமைந்து வளர்ந்து மணிப்பிரவாளம் வளர்ந்தது. ஸ்ரீபுராணம், கத்திய சிந்தாமணி நூல்கள் (கத்தியம் = உரை, பத்திய = பாட்டு). இவற்றால் பல்லவர் கால உரைநடைப் பாங்கு உணரலாம்" (தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், முதல் தொகுதி, ப. 697) என்று பல்லவர் கால உரைநடையை மதிப்பிடுகிறார்.

சோழர் கால உரைநடை

“சோழர் கால உரைநடை ஓங்கிவளர வாய்ப்புகள் நிறைந்திருந்தன. தத்துவங்களை மக்கள் நன்குணரத் தருக்க முறையில் விளக்க உரைநடை பயன்படுத்தப்பட்டது. பண்டை இலக்கியங்களை மக்கள் உணர்ந்து போற்றவும், வடமொழியின் செல்வாக்கால் விளைந்த கேடுகளைக் களையவும் உரைகள் வகுக்கப்பெற்றன. என்றாலும் இப்பொற்காலத்தில் ஓர் உரைநடை ஆசிரியர்கூடக் கண்ணில் படவில்லை.’ எல்லோரும் உரையாசிரியர்களே;” என்பார் மது.ச. விமலானந்தம் (தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், முதல் தொகுதி, ப. 697).

எம்.எஸ். பூரணலிங்கம்பிள்ளை, “வண்டமிழ் உரைநடை வளர்ச்சியின் வழிகாட்டி களாக இவர்கள் விளங்குகின்றனர்” (Good Tamil Prose began with commentors) (தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், முதல் தொகுதி, ப. 697) எனக் குறிப்பிடுவார்.

இளம்பூரணரின் காலம் 10 ஆம் நூற்றாண்டு என்பர். நச்சினார்க்கினியரின் காலம் 17 ஆம் நூற்றாண்டு என்பர். தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலத்தில் 10 ஆம் நூற்றாண்டுக்கும் 17 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தை உரையாசிரியர்கள் காலம் எனக் கணிக்கின்றனர். 10 ஆம் நூற்றாண்டுக்கும் 14 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தைச் சோழப் பேரரசுக் காலம் எனவும் குறிப்பிடுகின்றனர். இக்கால கட்டம் பல்துறையில் தமிழ் வளம்பெற்ற கால கட்டமாகத் திகழ்கிறது.

‘சோழர்களின் காலத்திலும் உரையாசிரியர்கள் சாசனம், மணிப்பிரவாளம் என மூவகையில் உரைநடை ஓடுகிறது’ என உரைக்கின்றனர். சோழர்கள் காலத்துச் சாசன நடை உரையாசிரியர்களின் நடையிலிருந்து வேறுபட்ட நடையாகும். சோழர்கள் காலத்தில் வடமொழிக்குப் பெருமதிப்பு இருந்தமையால் வடசொற்கள் வடமொழிவடிவில் கிரந்த எழுத்தில் இடம்பெற்றுள்ளன. இவை எண்ணிக்கையில் பெருமளவில் அமைந்துவிட்டன. கல்வெட்டுகள் பேச்சு வழக்கில் அமைந்தன. பல்லவர் காலத்தில் சமணர்கள் பிறப்பித்த மணிப்பிரவாள நடை சோழர்கள் காலத்தில் வைணவர்களால் வளர்த்தெடுக்கப்பெற்றது.

11 ஆம் நூற்றாண்டு முதல் 14 ஆம் நூற்றாண்டு வரை தமிழில் உரைநடை நன்கு வளர்ந்தது. இவ்வளர்ச்சிக்கு உரையாசிரியர்களே பெருங்காரணமாக அமைந்தனர். உரையாசிரியர்கள் இல்லையென்றால் இன்றுள்ள அளவிற்குத் தமிழ் வளர்ந்து வளம்பெற்றிருக்காது என்பது அறிஞர்களின் முடிவு. தற்கால உரைநடையின் முந்தைய நிலையினை உரையாசிரியர்களின் நடையில் காணமுடிகிறது. வேறுபட்ட வகையில் சொல்ல வேண்டுமானால் உரையாசிரியரின் உரைநடையிலிருந்து மாறுபட்ட வகையில் வளர்ந்ததே இக்கால உரைநடையாகும்.

நாயக்கர் கால உரைநடை

நாயக்கர் காலத்தில் எழுந்த தமிழ் உரைகள் மூலம் தமிழ் உரைநடை வளர்ந்தது. நாயக்கர்களின் காலத்தில், “நிரம்ப வழங்கிய தேசிகர் திருவருட் பயனுக்கு அழகிய

எளிய நடையில் உரை வகுத்தார். மயிலேறும் பெருமாள் கல்லாடத்திற்கு உரை வரைந்தார். இலக்கண விளக்க ஆசிரியர் வைத்தியநாத தேசிகர், இலக்கணக் கொத்து சாமிநாத தேசிகர், பிரயோக விவேகம் சுப்பிரமணிய தேசிகர் மூவர் நடையும் பண்டை இலக்கிய நடையினை ஒட்டியது; ஊற்றமானது. நன்னூலுக்கு நல்ல உரை - விருத்தியுரை வரைந்த சங்கர நமச்சிவாயப் புலவரும் உரைநடைக்கு நற்றொண்டு ஆற்றியுள்ளார். வைணவப் பிரபந்த உரையாசிரியர்கள் மணிப்பிரவாள நடை எழுதினர்; இக்காலத்தோடு இந்நடை மறையலாயிற்று. சிவப்பிரகாசர் 'தருக்க பரிபாஷை' எனும் உரைநடை நூல் யாத்துள்ளார்" என்பார் மது.ச. விமலானந்தம் (தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், முதல் தொகுதி, ப. 699).

ஐரோப்பியர் கால உரைநடை

'Prose' எனக் கருதுவதற்குரிய உரைநடைக்கு அடிகோலியவர்கள் ஐரோப்பியர்களாவர். இவர்களின் காலத்தில் தான் தமிழில் இயற்கையான ஒரு மொழி நடை உருவாகியது. ஐரோப்பியர்கள் பேச்சுத் தமிழ் கொண்டே, தமிழுக்கு ஒரு விதப் புதிய நடையினைக் கொணர்ந்தனர். மேலும் இவர்களது எழுதுபொருள் அச்சுப்பொறிகளின் வரவால் உரைநடை விரைந்து பரவி வளர்ந்தது.

தமிழ் மொழியில் தான் இந்திய மொழிகளிலேயே முதன் முதலில் உரைநடை நூல் தோன்றியது. அம்பலக் காட்டில் 1577 இல் வெளியான "கிருஸ்துபதேசம்" என்ற நூலே தமிழில் அச்சான முதல் நூல் என்கிறார் கால்டுவேல். இப்போது இந்நூல் கிடைக்கவில்லை.

தனிநாயகம் அடிகள் 1579 இல் கொல்லத்தில் ஆன்றிக் அச்சேற்றிய 16 பக்கம் கொண்ட 'கிறிஸ்துவ வணக்கம்' எனும் 'தம்பிரான் வணக்கம்' எனும் நூலே முதன் முதலில் தோன்றிய உரைநடை நூல் என்கிறார்.

சீகன் பால்கு ஐயர் 1716 இல் உருவாக்கிய 'தமிழ் - லத்தீன் ஒப்பிலக்கண ஆய்வு' எனும் நூலைத் தம்முடைய அச்சுக்கூடத்தில் பதிப்பித்தார். இதில் பல சொற்கள் இருமொழியிலும் ஒன்றாக இருப்பதை உணர்த்தியுள்ளார்; இலக்கண நடையை விட்டு, நீண்ட வாக்கியங்களில் பேச்சினைப் பின்பற்றி எழுதினார்.

தத்துவபோதகர் 17 ஆம் நூற்றாண்டில் கற்றோர் படிப்பதற்காகப் பல நூல்களைப் படைத்தார். இவருடைய நடை பேச்சுச் சொற்களுடன் பெருவாரியான வடசொற்கள் பயின்றுவரப் பழைய உரைநடையின் சாயலோடு அமைந்த நடையாக இருந்தது. இதே காலகட்டத்தில் அருளானந்த அடிகள் உரைநடை நூல்களை இயற்றினார்.

வசனநடை வளர்த்த வல்லாளர் எனப் போற்றப்படும் வீரமாமுனிவர் 18 ஆம் நூற்றாண்டில் தமிழ் உரைநடைக்குக் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றியுள்ளார், இவர் உரையாசிரியர் நடையினை ஒட்டிய உயர்ந்த நடையில், 'தொன்னூல் விளக்கம்' எனும் நூலினைத் தந்தார். இந்நூல் கற்றோர்க்கே உரிய நடையில் அமைந்திருந்தது. இவர் 'வேதியர் ஒழுக்கம்' எனும் நூலைப் பேச்சுத் தமிழை அடியொற்றி எழுதினார்; கல்லார்க்கெல்லாம் களிப்பருளும் நூலாக இந்நூல் திகழ்ந்தது. சமயக்

கொள்கைகளைப் பரப்புவதற்கெனத் தனி நடையை வகுத்துக் கொண்ட இவர், அனைவர்க்கும் ஏற்ற நடையில் 'பரமார்த்த குரு கதை' எனும் நூலை இயற்றினார்.

"வீரமாமுனிவர் நடை புதியது மட்டுமன்று. இதுகாறும் உரை இயற்றவும், கல்லில் எழுதவும், தருக்க முறையில் தரவும் பயன்படுத்தப்பட்டு வந்த உரைநடை, இப்போது உயரிய இலக்கியங்களை உருவாக்கவும் பயன்படுத்தப்பட்டது. உரைநடையாகவே உலவிய தமிழ், உரைநடை இலக்கியமாகவும் உருவெடுக்கத் தொடங்கியது. எழுத்துக்களில் சீர்திருத்தங்களையும் செய்தார் தைரியநாதர். அதுவரை உரைநடை, வெறும் நடையாகவே இருந்தது; இவரே உரைநடையில், இலக்கியங்களை உருவாக்கினார். இன்னபிர கரணியங்களால் "தமிழ் உரைநடையின் தந்தை", "தமிழ் உரைநடை இலக்கியத்தின் தோற்றுநர்" என்றேத்தப்படுகிறார் வீரமாமுனிவர். இவரது இலக்கிய நடை, ஏற்றமும் தோற்றமும் பெற்றொளிர்கிறது. பாமர நடை எளிமையானதும் இயற்கையானதுமாக உளது. கால்டுவேலரின் 'பரத கண்ட புராணம்' போப் ஐயரின் 'இங்கிலாந்து தேச சரித்திரம்', இங்கே எண்ணத்தக்கன.

மேற்கண்ட மூவரும் படைத்த புதிய நடை ஒருபுறமிருப்பினும், பழைய மரபு தழுவிய நடையும் மற்றொரு புறம் மேலோங்கி இருக்கவே செய்தது. இத்திறத்தது சிவஞான முனிவரின் சீரிய நடை, உரையாசிரியர்களின் செந்தமிழ் நடை இவர் கையாண்ட நடையானும், உணர்ச்சியும் கவர்ச்சியும் கூடிய வேகமும் விறுவிறுப்பும் கொண்ட நடையாகவே நிலவுகிறது. இதற்கு இவரது இலக்கண விளக்கச் சூறாவளி, சிவஞான மாபாடியம் சான்றாம். கண்டனம் மறுப்பு போன்றன விடுதற்கும் ஏற்ற கருவியாக உரைநடையை ஆக்கியுள்ளார். இதனாலும் உரைநடை உத்வேகத்துடன் வளர்ந்தது" என்பார் மது.ச. விமலானந்தம் (தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், முதல் தொகுதி, பக். 700 - 701).

19 ஆம் நூற்றாண்டில் உரைநடை வளர்ந்ததமைக்கான காரணங்கள்:

19ஆம்நூற்றாண்டு தொடங்கி உரைநடை ஓங்கி வளர்ந்து ஏற்றம் பெற்றது. அதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. அக்காரணங்களை,

1. நாடெங்கும் அச்சகங்கள் தோன்றின.
2. கிறித்தவமதம் பரப்ப எண்ணற்ற நூல்களை மிஷனரிகள் வெளியிட்டன.
3. இதைப் பார்த்த இந்துக்களும் தங்கள் இதிகாச புராணங்களை வசனங்களாக வடிக்கத் தொடங்கினர்.
4. இந்த நூற்றாண்டில்தான் பத்திரிக்கைகள் பிறந்தன.
5. சென்னைக் கல்விச் சங்கம், சென்னைப் புத்தகக் கழகம் தோனிறிப் பாட நூல்களையும் மொழி பெயர்ப்புக்களையும் வெளியிட்டன.
6. இதுவரை இருந்த அரசியற் குழப்பங்கள் ஓய்ந்து ஆங்கில ஆட்சியில் அமைதியான சூழ்நிலை உருவானது.
7. கல்விக் கூட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டன.
8. கிறித்தவ மதத்தை எதிர்த்துக் கண்டன நூல்கள் எழுந்தன

என மது.ச. விமலானந்தம் வகைப்படுத்துகிறார் (தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், முதல் தொகுதி, ப. 701).

இந்த வகையில் 19ஆம் நூற்றாண்டில் வேகத்துடனும் விறுவிறுப்புடனும் தமிழ் உரைநடை வளர்ந்து செழித்தது. இதனைத் தொடர்ந்து பல்வேறு பெருமக்கள் தமிழில் உரைநடை வடிக்கலாயினர்.

“தஞ்சைவாணன் கோவைக்கு உரை வகுத்த சொக்கப்ப நாவலர் நடை, தெளிவும் தனித்துவமும் வாய்ந்தது. பாலபோத இலக்கணம், கல்விப்பயன் எழுதிய விசாகப் பெருமாளையர், திருவள்ளுவ மாலைக்கு உரை யாத்த சரவணப் பெருமாளையர் இருவரும் இங்கே எண்ணத்தக்கவர்கள். திராவிடப் பிரகாசிகை தீட்டிய சபாபதி நாவலர் பழைய மரபினைப் பின்பற்றிக் கற்றோர்க்கே விளங்கும் நடை எழுதினார்; இதற்கு அவரது சிவகர்ணாமிர்தம் தக்க சான்றாகத் திகழ்கிறது.

தாண்டவராய முதலியார் இந்த நூற்றாண்டின் ‘உரைநடை இளவரசு’ என அழைக்கப்படுகிறார். இவர் இயற்றிய ‘பஞ்சதந்திரக் கதை’ தலையாய நூலாகத் திகழ்கிறது. நகைச்சுவை ததும்பவும் எழுதப்பட்டுள்ளது.

இந்த நூற்றாண்டின் ‘உரைநடை வேந்தராக’ ஒளிர்பவர் ஆறுமுகநாவலர். உரைநடைக்கு ஒரு புதிய வடிவினை வழங்கிய இவர் இலக்கண வழுவிலாத ஓர் எளிய இனிய தெளிவான நடையில் எழுதி வழிகாட்டினார். வழக்கிற் பயின்ற சொற்களைக் கொண்டே சிறுவிறு வாக்கிய அமைப்பில் தெளிவான தமிழில் இலகுவான நடையில் எழுதினார். குறியீட்டு முறைகளைப் பயன்படுத்தி மக்கள் உள்ளத்தில் ஊடுருவும் ஆற்றல் சான்ற அருமையான தமிழில் எழுதியும் பேசியும் ‘நாவலர் நடை’ என ஒரு தனிநடையை உண்டாக்கினார். இதனால் இவர் ‘தமிழ்க் காவலர்’ எனவும் ‘தற்காலத் தமிழ் உரைநடையின் தந்தை’ என்றும் ஏத்தப் பெற்றார்.

‘நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல், சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே’ என சி.வை. தாமோதரம் பிள்ளை போற்றுகிறார். யாழ்பாணத்து ஆறுமுக நாவலர் ‘வைதாலும் வசையின்றி வைவாரே’ என்று பாராட்டப்படுகிறார். கோப ஆவேசத்திலும் கூட அவருடைய தமிழ் பிறழாது இருந்தமையால் நாவலர் இங்ஙனம் பாராட்டப்படுகிறார். வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் இவரை ‘வசன நடை கைவந்த வல்லாளர்’ என்று குறிப்பிடுகிறார். காலத்தின் போக்கிற்கு ஏற்ப ஆறுமுக நாவலர் உரைநடையில் வட சொற்களும் ஆங்கிலச் சொற்களும் புகுந்து காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இதே காலகட்டத்தில் மிக நீண்ட வாக்கியங்களில் எழுதும் முறையும் இருந்தது. இதற்குச் சான்றாக வள்ளலார் என்றழைக்கப்படும் இராமலிங்க அடிகளின் உரைநடையைக் குறிப்பிடுவர். இராமலிங்க அடிகளின் மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம், உண்மை நெறி ஆகியவற்றைக் கூற முடிகிறது. இவற்றை அடிகள் கற்றோர்க்கே புரியும் சொற்களைக் கொண்டு இலக்கண வரம்புடன் படைத்துள்ளார்.

அட்டாவதானம் வீராசாமி செட்டியார் நீண்ட வாக்கியங்களில் எழுதினாலும் வழக்குச் சொற்களையும் உவமைகளையும் பழமொழிகளையும் கலந்து நகைச்சுவை உணர்வுடன் எளிய நடையில் எழுதியுள்ளார். இதனால் இவருடைய நடை எளிமையானதாகவும் இதயங் கவர்வதாகவும் காணப்படுகிறது. இவருடைய 'விநோதரச மஞ்சரி' தலை சிறந்த உரைநடை இலக்கியமாக இன்றளவும் எல்லோராலும் மதித்துப் போற்றப் பெறுகிறது.

மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளையின் உரைநடை மக்களின் பேச்சு வழக்கினை மையமாகக் கொண்டது; இலக்கண வரம்பு மீறாத எளிய இனிய நூலைச் சுவை மிளிர எழுதப்பட்ட வேதநாயகரின் நடை அந்நாளில் எல்லோராலும் விரும்பிப் படிக்கப்பட்ட நடையாகத் திகழ்கிறது. வேதநாயகம் பிள்ளையைத் தொடர்ந்து எழுதிய வத்தலக்குண்டு ராஜமையர் ஓசை நலமும் கவிதை ஓட்டமுடைய உணர்ச்சி நடையினை உருவாக்கியவராகவும் திகழ்கிறார். "இவ்விருவரும் 20 ஆம் நூற்றாண்டு நடைக்கு வித்திட்டவர்கள். தமிழில் கட்டுரை இலக்கியத்தைத் தொடங்கி வைத்தவர்களாகவும்; கதை இலக்கியத்திற்கு வித்தூன்றியவர்களாகவும் விளங்குகின்றனர்" என்பார் மது.ச. விமலானந்தம் (தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், முதல் தொகுதி, பக். 701-702).

இக்காலகட்டத்தில் சி.வை. தாமோதரம் பிள்ளை, மனோன்மணியம் பெ. சுந்தரம் பிள்ளை ஆகியோருடன் இந்த நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்தனர்.

நற்றமிழ் உரைநடையின் பொற்காலமாகவும் உரைநடை இலக்கியத்தின் உச்ச காலமாகவும் இருபதாம் நூற்றாண்டு திகழ்கிறது. இதற்கான காரணங்களை மது. ச. விமலானந்தம் பின்வருமாறு வரையறுத்துரைக்கிறார் (தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், முதல் தொகுதி, பக். 702-703) :

1. மக்கள் வாழ்க்கை முன்னேற்றத்திற்குத்தக மொழியும் முன்னேறத்தானே செய்யும்; அதற்கேற்ப உரைநடை தோன்றியது.
2. மேலை நாட்டுக் கல்வியின் பயனாக, விஞ்ஞான மெய்ஞ்ஞான உளவியல் கருத்துக்களை வெளியிடும் வகையில் உரைநடை ஓங்கியது.
3. கலைகளும் கருத்துக்களும் அறிவாக்கமும் பெருகப் பெருக அவற்றிற்கு ஈடு கொடுக்கும் வகையில் உரைநடை விரைந்தது.
4. உள்ளவுணர்வுகளைப் பல்வேறு வகைகளில் வெளிப்படுத்தும் ஆர்வம் கொண்டு உரைநடையினைப் பயன்படுத்தியதால் பல்வகை நடைகள் பிறந்தன.
5. தத்தம் புலமைகாட்டித் தனித்துவம் நாட்ட முனைந்தமையால் நடையில் மாறுபாடுகள் மலர்ந்தன. இவ்வேதுக்களுக்கு இயைய வானொலி, திரைப்படம் பத்திரிகைகள், பாடத்திட்டம் வாய்ப்பாக அமைந்தன.

இருபதாம் நூற்றாண்டில் உரைநடை வளர்த்த பெருமக்கள்

மகாகவி பாரதியார் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதியவர். அவர் கவிதையில் உயிர்ப்பூட்டியது போல உரைநடையிலும் உயிர்ப்பூட்டினார்; சிறப்பாக எழுதினார். அவருடைய கவிதைப் புகழ், உரைநடைச் சாதனையை வெளிக்காட்ட விடாமல் மறைத்து விட்டது. காலத்துக்கேற்ற உரைநடைக் கூறுகள் அவர்நடையில் மிளிர்கின்றன.

தமிழுக்கு வளம் சேர்த்த தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர் தொடக்கத்தில் பண்டிதர் நடையில் எழுதினார். காலத்தின் தேவையுணர்ந்த உ.வே. சாமிநாதையர் பின்னர் பழகு தமிழில் பொதுமக்கட்குப் புரியும் வகையில் மரபு குன்றாது எழுதினார். இந்நெறியை அப்படியே பின்பற்றியவர் கி.வா. ஜகந்நாதன் ஆவார்.

பண்டிதர் நடையில் எழுதிய பரிதிமாற் கலைஞரும் பின்னர் தம் நடையிலிருந்த கடுமையைக் குறைத்தார். தத்தம் பேச்சாலும் எழுத்தாலும் பைந்தமிழுக்கு ஊட்டம் அளித்தவர்களான மறைமலையடிகளாரும் திரு.வி. கல்யாணசுந்தரனாரும் பரிதிமாற்கலை ஞரும் தொடர்ந்து தமிழ் உரைநடைக்கு வலுவூட்டினர்.

தனித்தமிழ் இயக்கம் கண்ட மறைமலையடிகள் ‘தனித் தமிழ் நடையின் தந்தை என்று போற்றப்படுகிறார். வரம்பின்றிப் பிறமொழிச் சொற்கள் கலந்தால் தமிழின் துய்மையும் இனிமையும் கெடும் எனும் கருத்துடையவராய் மறைமலையடிகள் திகழ்ந்தார். இதனால் நல்ல தமிழ்ச் சொற்கள் நாளடைவில் அழிந்துபோகும். நிறைய தமிழ்ச் சொற்கள் அழிந்துபோனால் நற்றமிழ் நலமிழக்கும் எனக் கவலையுற்ற மறைமலையடிகள் 1916 இல் தனித்தமிழ் எழுதும் முறையினைத் தொடங்கி வைத்தார். அதனால் மறைமலையடிகள் ‘தனித் தமிழ் நடையின் தந்தை’ எனப் போற்றப்பட்டார்.

மறைமலையடிகளின் உரைநடையைக் குறித்து மது.ச. விமலானந்தம், ”இவர் நடை மிகவும் நீண்ட வாக்கியப் போக்கினது. ஆற்றல் சான்ற அறிவு நடை; ஓசைச் சிறப்பும் உயர்ந்த செந்நெறியும் உடைய, தெளிவும் துணிவும் மிக்க வீறுநடை, செந்தமிழின் சீர்மையும் சிந்தனை நீர்மையும் சிறந்துள்ள இவர் நடை எல்லோர்க்கும் எளியது என்று இயம்புதற்கில்லை. கல்லார்க்குச் சிறிது கடினமானதே. சங்கத்தமிழ் நடையின் சாயல் கொண்ட ஏற்றமான நடை” (தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், முதல் தொகுதி, ப. 704) என்று கருத்துரைக்கிறார்.

திரு.வி. கல்யாணசுந்தரனாரின் தமிழ் உரைநடை எளியது; இனியது. அதனாலேயே அவர் ‘தமிழ் உரைநடையின் முதல்வராகத் திகழ்கிறர். “சமூகம், பொருளியல், அரசியல் எத்துறைக் கருத்துக்களையும் எந்தப் பொருளையும் இன்றமிழில் எளிய முறையில் எழுத - பேச முடியும் என நிறுவியவர். பண்டைச் செந்தமிழ் நடையினைக் பாமரருக்கும் புரியக் கூடிய முறையில் இலகுவாக்கி, அதே சமயத்தில் இலக்கண அமைதி கெடாது எழுதிய - பேசிய பேராற்றலர். இவர் நடை பழமையும் புதுமையும் பெற்றெடுத்த புதுமை நடை. கற்றார்க்கும் கல்லார்க்கும் களிப்பருளும் கவிதைக் காந்த நடை, அழகு, ஆற்றல், எளிமை, இனிமை, ஒல்லென ஒலித்து மெல்லெனப் பாயும்

அருவியோசை, தெள்ளுதமிழின் துள்ளல், கற்பாரையும் கேட்பாரையும் கவர்ந்திழுத்துக் கனித்தமிழின் சுவையூட்டும் கவிநயம் அனைத்தும் இவர் நடையில் இதமாக அனுபவிக்கலாம்" என மது.ச. விமலானந்தம் குறிப்பிடுகிறார் (தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், முதல் தொகுதி, ப. 704). மேலும் அவர் திரு.வி. கல்யாணசுந்தரனாரின் நடை குறித்து, "பழைமையின் பண்பும் புதுமையின் பொலிவும் படிந்திருக்கும், பழமை, புதுப்பொலிவும்; புதுமை பழமை வலிவும் பெற்றிடும் இவர் நடையில், வினா எழுப்பி விடை தருவதும், வியப்புக்குறிப்புக்களை விடுப்பதும்; உண்டு கொல், இன்று கொல் என்றெல்லாம் ஐயங்களை எழுப்பிச் சிந்தனையைத் தூண்டுவதும் இவரது நடையின் போக்கு. இவர் பேச்சிலும் எழுத்திலும் ஒரே வகை உரைநடையினை பின்பற்றியுள்ளார். ஒரு முறை இவரது பேச்சினைக் கேட்ட பாரதி 'இதுவையா பேச்சு' எனத் துள்ளி எழுந்தாராம்!'. அத்துணை உணர்வூட்டும் அரிய இயல்பு எழில்நடையைத் திருத்தமான தமிழுக்குப் பொருத்தமான வடிவில் தந்து நல்ல தமிழ் நடையினை நிலைக்கச் செய்தவர். இலக்கியத் தமிழமைதியும் பேச்சுத் தமிழ்ப் பாங்கும் மயங்கிய இயற்கை நடை, எவரும் முன்மாதிரியாகப் பின்பற்றக்கூடிய பெற்றிமை சான்ற நடை காந்தியம், மார்க்சியம், சமரசம், பொதுவுடைமை, உடலோம்பல், சமயம், உளவியல் பற்றியெல்லாம் இவரியற்றிய பனுவல்களைப் படித்தல் வேண்டும். அவரவர் திறப்பாட்டிற்குத்தக அவரவர்கட்குத் தனிநடை அமையும்" (தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், முதல் தொகுதி, ப. 705) என்னும் கருத்தினையும் வெளியிடுகிறார்.

பண்டிதமணி கதிரேசச் செட்டியாரின் உரைநடைக் கோவை, திருவாசகவுரை ஆகியன அவருடைய நடையின் சிறப்பினை உணர்த்துகின்றன. ந.மு. வேங்கடசாமி நாட்டாரின் கட்டுரைகள், வேளிர் வரலாறு, உரைநூல்கள் ஆகியன அவருடைய நடைச் சிறப்பிற்குச் சான்று பகர்கின்றன. செல்வக் கேசவராய முதலியார் கட்டுரை இலக்கியத்தை வளப்படுத்தியதுடன் வாழ்க்கை வரலாற்று நூல்கள் பலவற்றையும் எழுதியுள்ளார். சோமசுந்தர பாரதியார், விபுலானந்தர், கா.சு. பிள்ளை, ரா.பி. சேதுப்பிள்ளை, கவிராஜ பண்டிதர் ஜெகவீரபாண்டியனார், பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், சிதம்பரநாதர், அண்ணா, மு. கருணாநிதி, வ.வே.சு. ஐயர், பாரதியார், வ.ரா., கல்கி, புதுமைப்பித்தன், டி.கே. சி., சீனிவாசராகவன் போன்ற பல்வேறு பெருமக்கள் தமிழ் உரைநடைக்கு வளம் சேர்த்துள்ளனர். அவர்களுள் கவி கா.மு. ஷெரீபும் தமிழ் உரைநடைக்குக் குறிப்பிடத்தக்க பங்கினையாற்றியுள்ளார்.

மாயூரம் முன்சீப் வேதநாயகம்பிள்ளை உரைநடை உலக அரங்கிலும் தமிழிலும் பல்வேறு சீர்திருத்தத்தைச் செய்துள்ளது என்னும் கருத்தினைத் தம்முடைய பிரதாப முதலியார் சரித்திரத்தில் வெளியிடுகிறார்.

"வசன காவியங்களால் ஜனங்கள் திருந்த வேண்டுமேயல்லாது, செய்யுட்களைப் படித்துத் திருந்துவது அசாத்தியமே அல்லவா? ஐரோப்பிய பாஷைகளில் வசன காவியங்கள் இல்லாமலிருக்குமானால், அந்தத் தேசங்கள் நாகரிகமும் நற்பாங்கும்

அடைந்திருக்கக் கூடுமா? அப்படியே நம்முடைய சுயப் பாஷைகள் வசன காவியங்கள் இல்லாமலிருக்கிறவறையில் இந்தத் தேசம் சரியான சீர்திருத்தம் அடையாதென்பது நிச்சயம்" (தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், முதல் தொகுதி, ப. 707) என வேதநாயகம் பிள்ளை உரைநடை குறித்த தம் கருத்தினைப் பதிவு செய்கிறார்.

உலக அரங்கில் மொழிவளர்ச்சிக்கும் சீர்திருத்தத்திற்கும் புதிய விழிப்புணர்வுக்கும் பெருங்காரணமாக அமைந்த உரைநடையை மதிப்பிடுகிறபோது அது பல்வேறு அமைப் பினைக் கொண்டதாக இருப்பதைக் காணமுடிகிறது.

"ஓர் உரைநடைப் பகுதியை நாம் ஆராயும் போது அது எந்த நோக்கத்திற்காக எழுதப்பட்டது என்பதையும் மனத்திற்கொண்டே ஆராய வேண்டும். ஏனெனில் அந்தப் பயன் நோக்கமே அதன் நடையை நிர்ணயம் செய்கிறது"(புதிய உரைநடை, ப. 10) எனக் குறிப்பிடும் மா. இராமலிங்கம் உரை நடையை,

1. விளக்க உரைநடை (Expositary Prose or Explanatory Prose)
2. அளவை உரைநடை (Argumentative Prose)
3. எடுத்துரை உரைநடை (Narrative Prose)
4. வருணனை உரைநடை (Descriptive Prose)
5. நாடக உரைநடை (Dramatic Prose)
6. சிந்தனை உரைநடை (Contemplative Prose)

எனப் பாகுபடுத்துகிறார்.

விளக்க உரைநடை

ஒன்றை விளக்கிக் காட்டுவது போல் எழுதப்படும் அனைத்துமே விளக்க உரைநடைகள் ஆகும். பள்ளிக்கூட, கல்லூரிப் பாடப் புத்தகங்கள், அறிவியல் நூல்கள், கலைக் களஞ்சியங்கள், பல்வேறு தொழில்களைப் பற்றியும் கலை பற்றியும் எழுதப்படும் விவர விளக்கங்கள் முதலியன இவ்வகையில் அடங்கும். மனிதனின் தீராத அறிவுப் பசிக்கு அடங்கும் இவ்வகை உரைநடை உணவாக அமைகிறது.

அளவை உரைநடை

அளவை உரைநடை என்பது விவாதிக்கும் போக்கில் அமையும். ஓர் உட்கோளைப் படிப்போர் இணங்கி ஏற்றுக் கொள்ளும் வகையில் பரிந்து வலியுறுத்தும். நன்முறையில் எழுதப்பட்ட அளவை உரைநடை, அறிவாராய்ச்சியைத் தூண்டுவதோடு அமையாமல் உணர்ச்சிக்கும் விருந்து தரும். மிக உயர்ந்த அளவை உரைநடை, படிக்கும் வாசகரை 'நீங்கள் இதை ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்று நிர்பந்தப்படுத்துவது இல்லை - மாறாக, பிரச்சனைகளை நுணுக்கமாகப் புரிந்து கொள்ளும் வகையில் சிந்திக்கவே தூண்டும்.

எடுத்துரை உரைநடை

கதை சொல்லும் எல்லா நூல்களும் இவ்வகையில் அடங்கும். வேறு எந்த வகையான உரைநடையையும் விட மக்கள் விரும்பிப் படிப்பது இதுவே. வெறும் நிகழ்ச்சிகளை

ஒன்றின்மேல் ஒன்றாய் அடுக்கிக் காட்டி அச்சத்தையும் புதிரையும் ஊட்டும் துப்பறி கதை முதல் பாத்திரப் படைப்பில் சிறந்து நிற்கும் இலக்கியத் தகவுடைய புனைகதை இலக்கியம் வரை எல்லாமே எடுத்துரைப்பது உரைநடையே.

வருணனை உரைநடை

புலன் உணர்வு மூலம் ஏற்படும் அனுபவங்களை வருணித்துக் காட்டும் உரைநடையை வருணனை உரைநடை என்பர் (இதைத் தனியே கொள்ளாமல், எடுத்துரைக்கும் உரைநடையிலேயே சிலர் அடக்கிக் காட்டுவது உண்டு). மனிதர்களையும் பொருள்களையும் இவை வருணிக்கும். படிப்போரின் உணர்வுகளைத் தட்டி எழுப்பும் ஆற்றல் இதற்கு உண்டு.

நாடக உரைநடை

நாடகத்தில் இடம்பெறும் பாத்திர உரையாடல்கள், இடையிடையே நாடக ஆசிரியர் தரும் மேடை விளக்கக் குறிப்புகள் ஆகியவற்றை நாடக உரைநடை எனலாம். 'நாடக உரைநடை' இயல்பு நவிற்சிப் பாங்கு உடையதாய் இருக்கும்; பேச்சு வழக்கை ஒட்டியே அமையும்.

சிந்தனை உரைநடை

எழுதுவோனின் சொந்த ஆளுமை முனைப்பாகத் தெரியும் வகையில் எழுதப்படுவது சிந்தனை உரைநடை. தன்னுணர்ச்சிப் பாங்கான கட்டுரைகள், ஆன்மிக அனுபவங்களை உணர்த்தும் கட்டுரைகள் முதலியன இவ்வகையில் அடங்கும் (சிலர் 'சிந்தனை உரைநடை'யை 'வருணனை உரைநடை'யாகக் கொண்டு ஒன்றாகவே அடக்குவர். "மேலே கண்ட பாகுபாடுகள் அனைத்தும் முடிந்த முடிபானவை அல்ல. அவரவர்கள் தத்தம் மனப்போக்கிற்கு ஏற்பக் கூட்டியோ குறைத்தோ சில அடிப்படையான பாகுபாடுகளைச் செய்வர். மொத்தத்தில் உரைநடையை படைக்கவும் பகுத்துணரவும் இவ்வகையான பாகுபாடுகளைத் தெரிந்திருப்பது நல்லது" என்பார் மா. இராமலிங்கம் (புதிய உரைநடை, ப. 12).

மா. இராமலிங்கம் தம் 'புதிய உரைநடை' எனும் நூலில், உரைநடையில் கையாளப்படும் சொற்களின் வழக்காற்று மரபை ஒட்டி,

1. பொதுச் சொற்கள்/ தரமான சொற்கள் (Standard words)
2. பேச்சு வழக்கு (Colloquialism)
3. குறுமொழி (Slangs)
4. வட்டாரச் சொற்கள் (Dialectal words)
5. திசைச் சொற்கள் (Foreign words)
6. கலைத்துறைச் சொற்கள் (Technical Terms)
7. வழக்கிறந்த சொற்கள் (Obsolete words)

என வகைப்படுத்துகிறார்.

இங்ஙனம் உரைநடையின் வகைப்பாடும் உரைநடையில் கையாளப்படும் சொற்களின் வகைப்பாடும் உரைநடைக்கு அணி சேர்க்கின்றன.

முடிவுகள்

காலங்காலமாகத் தமிழில் உரைநடை இருந்துள்ளது; இருப்பினும் பாட்டிலக்கியமே தமிழில் தொடக்க காலம் முதல் செழித்து வளர்ந்தது.

உலக அரங்கில் தமிழ் அல்லாத பிறமொழிகளில் உரைநடை முன்பே தோன்றியுள்ளது.

ஐரோப்பியர் வரவுக்கு முன்னர் தமிழில் உரைநடை இல்லை என்று யாராலும் சொல்ல முடியாது. ஆங்கிலேயர் தொடர்பால் அது ஓர் தனித்ததோர் இலக்கிய வடிவமாக உருவாகிப் பல்வேறு இலக்கிய வகைமைகளில் பெருகி வளர்ந்தது என்று சொல்லலாமே தவிரத் தமிழில் அறவே உரைநடை இல்லை என்று அறுதியிட்டு உறுதியாகச் சொல்ல ஒல்லாது.

தொல்காப்பியர் காலத்தும் அவருக்கு முன்னும் நான்கு நெறிப்பட்ட உரைநடை இலக்கியங்கள் இருந்தன.

பாட்டினும் கடுமையான உரைநடை சிலம்பில் காணலாகிறது என்பது புலப்படுகிறது.

பல்லவர் காலத்தில் உரைநடை 1. களவியலுரை, 2. சாசனங்கள், 3. மணிப்பிரவாளம் என முப்பிரிவுகளில் வளர்ந்தது.

சோழர் கால உரைநடை ஓங்கிவளர வாய்ப்புகள் நிறைந்திருந்தன. தத்துவங்களை மக்கள் நன்குணரத் தருக்க முறையில் விளக்க உரைநடை பயன்படுத்தப்பட்டது.

10 ஆம் நூற்றாண்டுக்கும் 14 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தைச் சோழப் பேரரசுக் காலம் எனவும் குறிப்பிடுகின்றனர். இக்கால கட்டம் பல்துறையில் தமிழ் வளம்பெற்ற கால கட்டமாகத் திகழ்கிறது.

11 ஆம் நூற்றாண்டு முதல் 14 ஆம் நூற்றாண்டு வரை தமிழில் உரைநடை நன்கு வளர்ந்தது. இவ்வளர்ச்சிக்கு உரையாசிரியர்களே பெருங்காரணமாக அமைந்தனர்.

நாயக்கர் காலத்தில் எழுந்த தமிழ் உரைகள் மூலம் தமிழ் உரைநடை வளர்ந்தது.‘Prose’ எனக் கருதுவதற்குரிய உரைநடைக்கு அடிகோலியவர்கள் ஐரோப்பியர்களாவர்.

தமிழ் மொழியில் தான் இந்திய மொழிகளிலேயே முதன் முதலில் உரைநடை நூல் தோன்றியது.

வசனநடை வளர்த்வர் எனப் போற்றப்படும் வீரமாமுனிவர் 18 ஆம் நூற்றாண்டில் தமிழ் உரைநடைக்குக் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றியுள்ளார்

கண்டனம் மறுப்பு போன்றன விடுதற்கும் ஏற்ற கருவியாக உரைநடையை ஆக்கியுள்ளார். இதனாலும் உரைநடை உத்வேகத்துடன் வளர்ந்தது.

இந்த வகையில் 19ஆம் நூற்றாண்டில் வேகத்துடனும் விறுவிறுப்புடனும் தமிழ் உரைநடை வளர்ந்து செழித்தது. இதனைத் தொடர்ந்து பல்வேறு பெருமக்கள் தமிழில் உரைநடை வடிக்கலாயினர்.

நற்றமிழ் உரைநடையின் பொற்காலமாகவும் உரைநடை இலக்கியத்தின் உச்ச காலமாகவும் இருபதாம் நூற்றாண்டு திகழ்கிறது.

மகாகவி பாரதியார் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதியவர். அவர் கவிதையில் உயிர்ப்பூட்டியது போல உரைநடையிலும் உயிர்ப்பூட்டினார்; சிறப்பாக எழுதினார். அவருடைய கவிதைப் புகழ் உரைநடைச் சாதனையை வெளிக்காட்ட விடாமல் மறைத்து விட்டது. காலத்துக்கேற்ற உரைநடைக் கூறுகள் அவர்நடையில் மிளிர்கின்றன.

மாயூரம் முன்சீப் வேதநாயகம்பிள்ளை உரைநடை உலக அரங்கிலும் தமிழிலும் பல்வேறு சீர்திருத்தத்தைச் செய்துள்ளது.

உலக அரங்கில் மொழிவளர்ச்சிக்கும் சீர்திருத்தத்திற்கும் புதிய விழிப்புணர்வுக்கும் பெருங்காரணமாக அமைந்த உரைநடையை மதிப்பிடுகிறபோது அது பல்வேறு அமைப்பினைக் கொண்டதாக இருப்பதைக் காணமுடிகிறது.

உரைநடையின் வகைப்பாடும் உரைநடையில் கையாளப்படும் சொற்களின் வகைப்பாடும் உரைநடைக்கு அணி சேர்க்கின்றன.

துணைநூற்கள் :

References

இராமலிங்கம் மா., புதிய உரைநடை, மீனாட்சி புத்தக நிலையம், மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை - 625 001, முதற்பதிப்பு : டிசம்பர் 2013 .

செல்வநாயகம் வி., தமிழ் உரைநடை வரலாறு, சாராதா விலாஸ் பிரஸ், கும்பகோணம், முதற்பதிப்பு : 1957.

தமிழண்ணல் (உ.வி), தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும், மீனாட்சி புத்தக நிலையம், மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை - 625 001, முதற்பதிப்பு : ஏப்பிரல் 2008.

விமலானந்தம் மது.ச., தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், ஐந்திணைப் பதிப்பகம், 279, பாரதிசாலை, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005, முதற்பதிப்பு : நவம்பர் 1987.